தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-4-2015

ஐயா,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 36வது வருடாந்திரப் பட்டமளிப்பு விழா வரும் ஜுலை 2015ல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பாக கீழ்க்கண்ட அறிவிப்பினை தங்களது மேலான நாளிதழில் அனைத்து பதிப்புகளிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 36வது வருடாந்திரப் பட்டமளிப்பு விழா வருகின்ற ஜுலை 2015 ல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தால் 31.03.2015 அன்று அல்லது அதற்கு முன்னர் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட மாணவ மாணவியர்களிடமிருந்து பட்டங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் இதர விவரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளமான www.tnau.ac.in மூலம் பதிவிறக்கம் செய்து 04.05.2015 முதல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப கட்டணத்தை பல்கலைக்கழக இணைய தளத்தின் மூலம் செலுத்த வேண்டும். இப்பட்டமளிப்பு விழாவிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் (அதாவது தற்காலிக பட்டப்படிப்பு சான்றிதழின் (PC) நகல் மற்றும் இணையதளம் மூலமாக வங்கியில் செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான இரசீது) இப்பல்கலைக்கழகத்திற்கு 10-6-2015ம் தேதிக்குள் வந்து சேர வேண்டும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்